DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.8

| | | |
|---|---|---|
| Name | :திரு. கார்த்திக் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

28.02.2024 – 01.20 PM

சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

முதல் விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் விருதுநகர் மாவட்டம் மறைக்குளம் கிராமம். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 யைத் தெரியும். அவர் வட்டாட்சியராக இருந்து வந்தார். அவர் தான் எங்களை மீட்டவர். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர்தான் நாங்கள் கல் அருக்கும் வேலை செய்த அபிராமம் அச்சங்குளத்தில் உள்ள சுகன்யா சேம்பரின் உரிமையாளர்.

2. எங்கள் ஊரில் கடந்த ஜனவரி மாதம் 2012 ம் ஆண்டு செங்கல் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். உலக்குடியைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் மூலம் சேம்பருக்கு வேலைக்கு வந்தோம். எங்கள் ஊரைச் சேர்ந்த 10 குடும்பங்கள் கணவன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வேலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஊரில் சரியாக மழை பெய்யாததால் குடும்பக் கஷ்டம் காரணமாக வேலைக்கு வந்தோம்.

3. சுமார் 6 மாதங்கள் வேலை பார்த்தோம். தங்குவதற்கு சேம்பரில் ஓட்டுவீடு அமைத்துக் கொடுத்தார்கள். நாங்கள் சம்பளத்தில் காய்கறி வாங்கிச் சமைத்து சாப்பிட்டு வந்தோம். வாரம் முழுவதும் வேலை பார்த்தால் ஒரு நாள் சம்பளம் தருவார்கள். ஒரு நாளுக்கு ஆயிரம் கல் வீதம் ஒரு வாரத்திற்கு 5000 கற்கள் அறுப்போம்.

4. நாங்கள் ஏற்கனவே முன்பணமாக வாங்கிய ரூ.40,000/–ல் கழித்துக் கொள்வார்கள். அதைக் கொண்டுதான் குடும்பம் நடத்தி வந்தோம். ஒரு நாள் என் மனைவி ரேஷன் கடையில் அரிசி வாங்குவதற்காக என்னையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு ஊருக்குச் சென்றுவிட்டார்.

5. அன்றிரவு எனது மனைவி திரும்பி வராததால் சேம்பரின் உரிமையாளர்

என்னை பச்சைக்கம்பால் அடித்து சேம்பரில் உள்ள கல் எரியும் இடத்தில் கட்டி வைத்தார். எங்கள் ஊரைச் சேர்ந்த உடனிருந்த நபர்கள் யாரும் இதைக் கேட்க வந்தால் உங்களையும் அடிப்பேன் என்று சொன்னார். அதனால் அவர்கள் பயந்து கொண்டு சேம்பருக்குள் உட்கார்ந்திருந்தார்கள்.

6. பின்னர் மறுநாள் எனது பிள்ளைகளை சேம்பரில் விட்டுவிட்டு உரிமையாளருக்கு தெரியாமல் வெளியில் சென்றேன். மறுநாள் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரிடம் சென்று கொடுமை குறித்து தகவல் சொன்னேன். அதன் பேரில் காரியாபட்டி, கமுதி ஆகிய ஊர் வட்டாட்சியர்கள் வந்து விசாரித்தார்கள். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரிலிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. சாட்சிகளின் விசாரணையை ஒத்திவைக்க மனுத்தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது)

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.